DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 286/2025
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஷ்வா |
| Father / Husband Name | குமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.01.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தூதுவிளம்பட்டியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 01.10.2023 ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த பிரசாந்த் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக போலிஸார் அச்சிறுப்பாக்கம் அருகே அமைந்துள்ள 99 காபி ஷாப் அருகே போலிஸார் வரைபடம் வரைந்ததற்க்கு சாட்சியாக நானும் வசந்த் என்பவரும் கையொப்பம் செய்ததோம். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

**2. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கபப்படுகிறது.**

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 286/2025
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வசந்த் |
| Father / Husband Name | ஜெயராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.01.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தூதுவிளம்பட்டியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 01.10.2023 ம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த பிரசாந்த் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக அறப்பேடு அருகே அமைந்துள்ள 99 காபி ஷாப் அருகே போலிஸார் மேற்படி விபத்து குறித்து வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்ததற்கு நானும் எனது நண்பர் விஷ்வா என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கபப்படுகிறது.**

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 286/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | காமினி |
| Father / Husband Name | புருஷோத்தமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.01.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஆத்தூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன பிரசாந்த் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 01.10.2023ம் தேதி கருங்குழியில் இருந்து வந்து அச்சிறுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே நான்எனது தோழி சுதாவுடன் பேருந்துக்காக காத்துக்கொண்டிருந்தபோது மேற்படி பிரசாந்த் என்பவர் இருசக்கர வாகனத்தில் அச்சிறுப்பாக்கத்திலிருந்து அவரது வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தார் அப்போது அவரிடம் நாங்கள் லிப்ட் கேட்டு அவரது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து கொண்டு சென்றோம். அப்போது அறப்பேடு அருகே அமைந்துள்ள 99 கடை அருகே நாங்கள் வரும்போது எதிரே வந்த TN 10 Z 6129 என்ற பதிவெண்கொண்ட ஈச்சர் லாரி சென்னை நோக்கி செல்லும் சாலையில் இருந்து அதிவேகமாக வந்து TURN செய்த போது நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் வாகனத்தை ஓட்டி வந்த பிரசாந்த் என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். எனது தோழி சுதா என்பவருக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது எனக்கு காலில் அடிப்பட்டிருந்தது. ஆஜர் எதிரி தான் மேற்படி லாரியை ஓட்டி வந்த நபர் ஆவார்.

**குறுக்கு விசாரணை**

**2. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டுகிறது.**

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 286/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுதா |
| Father / Husband Name | குணசேகரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.01.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஆத்தூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன பிரசாந்த் என்பவர் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார்.கடந்த 01.10.2023 ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் மேற்படி பிரசாந்த் என்பவர் அச்சிறுப்பாக்கத்தில் இருந்து திண்டிவனம் நோக்கி இருசக்கர வாகனத்தில் அச்சிறுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே வரும் போது நானும் எங்கள் ஊரை சேர்ந்த காமினி என்பவரும் அவரிடம் லிப்ட் கேட்டு அவரது இருசக்கர வாகனத்தில் அமர்ந்து வந்து கொண்டிருந்தபோது அறப்பேடு அருகே அமைந்துள்ள 99 காபி ஷாப் அருகே வரும் போது திண்டிவனத்திலிருந்து சென்னை நோக்கி அதிவேகமாக வந்த TN 10 Z 6129 என்ற பதிவெண்கொண்ட ஈச்சர் வாகனம் U- Turn செய்யும் போது நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. அதில் நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டி வந்த பிரசாந்த் என்பவருக்கு தலையில் பலத்த அடிப்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். எனக்கும் தலையில் அடிப்பட்டது. காமினி என்பவருக்கு காலில் அடிப்பட்டது. காயம்பட்ட எங்களை சிகிச்சைக்காக மேல்வருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம். ஆஜர் எதிரி தான் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த அந்த நபர் ஆவார்.

**குறுக்கு விசாரணை**

**2. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கபப்படுகிறது.**

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 286/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரன் |
| Father / Husband Name | முருவன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.01.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தூதுவிளம்பட்டியில் வசித்து மரம் வெட்டும் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பிரசாந்த் என்பவர் எனது மகன் ஆவார் தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது மகன் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அச்சிறுப்பாக்கத்தில் இருந்து திண்டிவனம் நோக்கி எனது மகன் வாகனத்தை ஓட்ட அதன் பின்னால் இரண்டு நபர்களை அமர வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தபோது அறப்பேடு கூட்ரோட்டி அருகே வரும் போது சென்னையிலிருந்து வந்த ஈச்சர் வாகனம் அவர் திரும்பும் போது அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார்கள். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது மகன் இறந்த நிலையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான் மேற்படி புகாரை நான்தான் கொடுத்தேன். **(அ.சா.1 கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கபப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை**